ஸ்ரீ



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமம்

திருமால் போற்றித் திருவகவல்

ஆக்கியோன் :

கி. பக்ஷிராஜன்

வழக்குரைஞர்

ஸன்னதித் தெரு, வீரராகவபுரம்.

திருநெல்வேலி சந்திப்பு.

1961

திருக்குறுங்குடி ஜீயர் மடத்து வெளியீடு

விலை ரூ. 1-50

ஸ்ரீ



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ விஷ்ணு: ஸஹஸ்ர நாமம்

திருமால் போற்றித் திருவகவல்

★

ஆக்கியோன்:

கி. பக்ஷிராஜன்

வழக்குரைஞர்

ஸன்னதித் தெரு, வீரராகவபுரம்,

திருநெல்வேலி சந்திப்பு.

1961

விலை ரூ. 1–50



திருக்குறுங்குடி, மடத்தில் எழுந்தருளியிருக்கும்,

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி

ஸ்ரீ பேரருளாள ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி

46-வது பட்டம் மடாதிபதி

THIRU JEER MUTT TIRUKKURUNGUDI

திரு. ஜீயர் மடம் திருக்குறுங்குடி.

10–2–'61

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ குருங்கமுநயே நம:

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ பேரருளாள ராமாநுஜ ஜீயர் ஸ்வாமிகள் திருவுள்ள முவந்தருளிய

ஸம்மதிப் பத்திரிகை.

பரந்த தண்பரவையுள் நீர்தொறும் பரந்த அண்டமிதெனப் பரந்து நிலவிசும் பொழிவறக் கரந்த சில்லி டந்தொறும் இடந்திகழ் பொருள் தொறும் கரந்தெங்கும் பரந்துளனான.

ஸ்ரீமந் நாராயணனை அர்ச்சித்தற்குரிய ஸஹஸ்ர நாமங்களும் (ஆயிரம் பெயர்களும்) ஸ்ரீ பீஷ்மரால் தர்மபுத்ரருக்கு உபதேசிக்கப்பட்டவை. இவற்றுக்கு ஸ்ரீபட்டர் தக்க நிருக்திகள் காட்டி "பகவத் குண தர்ப் பணம்" என்றதொரு ஆச்சர்யமான பாஷ்யம் அருளிச் செய்திருக்கிறார். இவையெல்லாம் ஸம்ஸ்க்ருத மொழியில் இருத்தலோடு மட்டுமன்றி அம்மொழிப் பயிற்சி நன்குடையார்க்கல்லது பிறருக்கு அறிவரிதாயும் இருக்கின்றன. அவற்றின் பொருளையறிந்து பயனை யாவரும் துய்க்கும் வண்ணம் ஸ்ரீமான் பக்ஷிராஜ ஐயங்கார் இவ்வாயிர நாமங்களையும் அகவல் துறையில், ஆழ்வார்களின் அருளிச் செயல்களையும் பிறநூல்களையும் துணைகொண்டு ஸ்ரீபட்டருடைய பாஷ்யத்துக்கிணங்கத் தொகுத்து. "திருமால் போற்றித் திருவகவல்" என்ற பெயரிட்டு ஆயிர நாமங்களையும் வடமொழியிலும், தமிழ் மொழியிலும் காட்டி, அவ்வாயிர நாமங்களின் தத்வப் பொருள்களைத் தமிழில் செவிக்கினிய செஞ்சொற் கவிதையாகத் தந்திருக்கிறார்.

ஸ்ரீ:

திருமால் போற்றித் திருவகவல்

முன்னுரை.

தெய்வ பக்தியும், தமிழ்ப் புலமையும் நிரம்பிய ஸ்ரீ உ., வே. புன்னரசு அய்யங்கார் ஸ்வாமி, தாம் இயற்றியுள்ள இவ்வழகிய நூலுக்கு ஒரு முன்னுரை வரைந்து தரல் வேண்டும் என்று அடியேனுக்கு ஒரு அன்புக்கட்டளை பிறப்பித்தார். பாகவத நியமனம் என்று அதை ஏற்று, அடியேனுடைய தகுதியின்மையைக்கூடக் கருதாது அப்பணியை ஆற்றுகின்றேன்.

"யாநி நாமாநி கௌணாநி, விக்யாதாநி மஹாத்மந: என்ற ஞானதிகரான பீஷ்மாது வாக்கியத்தில் சொல்லப்பட்டபடி, திருமால் திரு நாமம் ஆயிரமும் ஒவ்வொரு குணத்தையிட்டு அமைந்தவை. அதற்கேற்ப ஸஹஸ்ரநாமத்துக்குப் பாஷ்யம் செய்தருளிய ஸ்ரீ பராசர பட்டர், அந்தப் பாஷ்யத்துக்குப் "பகவத்குண தர்ப்பணம்" என்றே பெயர் சூட்டினர். சிறிய கண்ணாடி பெரிய உருவைக் காட்டுமாபோலே, ஒவ்வொரு திரு நாமமும் எம்பெருமானுடைய ஒவ்வொரு கல்யாண குணத்தைப் பிரதிபாதிக்கிறது, பிரதிபலிக்கும்படி செய்கிறது என்று த்வனிக்க அப்பெயர் அமைந்திருக்கிறது. மேலும், பட்டர், ஆழ்வார்களது அருளிச் செயல்களில் ஆழ்ந்து கிடந்த திருவுள்ளம் படைத்தவராதல்பற்றி, அவர் செய்தருளிய பாஷ்யத்தில் பல் நாமங்களுக்கு ஆழ்வார்கள் அநுபவத்தைக்கொண்டு பொருள் காட்டப்பட்டிருக்கிறது. இந்த "போற்றித் திருவகவல்" அந்த பாஷ்யத்துக்குண்டான மேற் சொன்ன இரு பெருமைகளையும் உட்கொண்டிருப்பதோடு, இது தமிழில் ஆக்கப்பட்டிருப்பதால் ஆழ்வார்கள் அருள்மொழிகளையே அங்கங்கேகையாண்டு மேன்மை பெற்றிருக்கிறது. சில இடங்களை மட்டும் இங்கே காட்டுவோம்; எதிர் நிகழ் கழிவு (291); என் செய்வன் என்றிருப்பாய் (294); முதல் தனி வித்து (430 ; தானவர் வீழ் மணித்தடம் (809); அப்பொழுதைக்கப்போதமுதமே (898); கைகழலாநேமி [998]

தமிழ் மொழியின் பால் நனிபெரும் ஆர்வம்கொண்ட ஒரு சிலர் வடமொழியை அறவே விலக்க வேண்டுமென்றும், ஆலயங்களில் நிகழும் அர்ச்சனைகள்கூட தமிழ்ச் சொற்கள் கொண்டே நடைபெற வேண்டுமென்றும் விரும்பி நிற்பதைக் காண்கிறோம். அத்தகைய எண்ணமுடையோரும்கூட ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் திகழும்

அருமை பெருமைகளை இழந்து போகாவண்ணம் வெகு விசால நோக்கத்தோடு அந்த ஆயிர நாமங்களின் ஸாரமான அர்த்தங்களை இனிய தமிழ்ச் சொற்கள் மூலம் விளக்கி ஒரு அழகிய அகவல் வடிவில் அமைந்திருக்கும் பெருமை போற்றற்பாலது. ஸஹஸ்ர நாமத்தைப் படனம்செய்து பெறும் புண்ணியம் அகவலைமட்டும் படிப்போரும் எய்துவார்கள் என்பது திண்ணம்.

இப்புத்தகம் அமைக்கப்பட்டிருக்கும் முறை பல விதத்திலும் படிப்பவருக்குப் பயனளிக்க வல்லது பட்டர் நிர்வாகத்தின்படி ஆயிர நாமங்கள் எவ்வெவை என்பது காட்டப்பட்டிருக்கிறது. அந்நாமங்கள் நாகர எழுத்திலும் தமிழ் எழுத்திலும் அச்சிடப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு நாமத்தின் பொருளும் — பட்டர் திருவுள்ளம் பற்றிய முறையில்-ஒவ்வொரு அழகிய சொற்றொடர் கொண்டு விளக்கப்பட்டிருக்கிறது சுருக்கமாயிருப்பினும் தெளிவு குன்றாத முறையில் அப்பொருள் கூறப்பட்டிருக்கிறது.

ஸ்ரீமான் பக்ஷிராஜ ஐயங்கார் ஸ்வாமி உள்ளத்தில் வெள்ளமிட்டோடும் இலக்கியச் சுவைக்கும், பக்திப் பெருக்குக்கும் போக்குவிடு இதுஎன இவ்வகவல் விளங்குகிறது. இதன்மூலம் ஆசிரியரது ஆழ்ந்தபடிப்பு, நுண்ணிய ஆராய்ச்சித் திறமை, பகவான், ஆசாரியர்கள், பாகவதர்கள் இவர்களிடம் அவருக்கிருக்கும் பக்தி விச்வாஸங்கள் எல்லாம் நன்கு வெளியாகின்றன. இந்நூலைத் தயாரித்து வெளியிடுவதில் அவரை ஊக்குவித்த பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ திருக்குறுங்குடி ஜீயர் ஸ்வாமிகள் திறத்து நாம் அனைவரும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்

ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவின் திருமுன்பே பீஷ்மரால் ஓதப்பட்ட ஆயிர நாமமும் ஒள்ளியவாகி இவ்வகவலில் தமிழ் வடிவத்தில் திகழ்வதை அனைவரும் படித்தின்புறுவதோடு அதன்மூலம் எல்லா நலன்களையும் எய்த வேண்டுமென அவ்வாயிர நாமன் திருவருளை இறைஞ்சி நிற்கின்றேன்.

சென்னை-7. D. ராமஸ்வாமி,
அட்வகேட்.

M. பக்தவத்சலம்,
Home Minister.

சென்னை,
16—1—'61.

விஷ்ணு சகஸ்ரநாமம், நம்மைப் பரவசப்படுத்தும் ஒரு நாமாவளி. இந்த நாமாவளியைக்கூட ஸ்ரீ பட்சிராஜன் சிறந்த அகவலாக தமிழ்ப் படுத்தியிருக்கிறார் இந்த அகவலில் விஷ்ணுவின் ஆயிரம் நாமங்களுக்கும் விளக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது. இதுவும் ஒரு சிறந்த நாமாவளியாக விளங்குகிறது. ஸ்ரீ பட்சிராஜனின் ஆற்றலை நான் பெரிதும் பாராட்டுகிறேன். இவருக்கு ஆழ்வார்கள் பாசுரங்களிலுள்ள பற்றே இந்த அகவலை ஆக்குவதில் உதவியிருக்கிறது. ஆசிரியருக்கு என் நல் வாழ்த்துக்கள்.

எம். பக்தவத்சலம்.

ஸமர்ப்பணம்

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம், அம்புப் படுக்கையில் கிடந்த ஸ்ரீ பீஷ்மரால் தருமபுத்திரருக்கு உபதேசம் செய்யப்பட்டது. அவ்வுபதேசமும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவின் ஸந்நிதியிலேயே செய்யப்பட்டது. எனவே இது பகவான் திருமுகம் மலர்ந்து திரு, வுள்ளமுவந்து அநுக்ரகம் செய்யப்பெற்றது. இதற்கு அத்வைதம், த்வைதம் விசிஷ்டாத்வைதம் இம்மூன்று மதஸ்தர்களாலும் பாஷ்யம் செய்யப்பட்டிருக்கிறது விசிஷ்டாத்வைத மதச்சார்பில் ஸ்ரீ கூரத்தாழ்வார் திருக்குமாரரும், அதிமேதாவியுமான ஸ்ரீபட்டர் பாஷ்யம் அருளிச் செய்திருக்கிறார். ஸ்ரீ பட்டர் பாஷ்யம் அற்புதமான தொன்றாகும். தம் பாஷ்யத்துக்கு 'பகவத்குண தர்ப்பணம்' (இறைவன் குணக் கண்ணாடி) என்று விசேடப் பெயர் சூட்டியிருக்கிறார் பட்டர்.

''உயர்வறஉயர் நலம் உடையவன்,'' இறைவன் என்றார் நம்மாழ்வார் அவன் நலங்களைக்கூற எழுந்தவையே அவனது ஆயிரம் நாமங்கள். '' நாமங்கள் ஆயிரமுடைய நம் பெருமான்'' என்பது திருவாய்மொழி. அப்பெருமானின் குணங்களைப் பேசும் அவன் நாமங்களை அவன் சீர்க்கடலை எப்போதும் சிந்தை செய்து, அவன் ''பலமுந்து சீரில்'' ஓவாது படிந்து திளைத்த, பன்னிருஆழ்வார்களின் ஈரச் சொற்கள் பலவாகயாகப் பரவுகின்றன மகாகவி கம்பர்,ஸஹஸ்ர நாமத்தில் வரும் நாமங்களின் பொருளைத் தன் காவியத்தில் பல விடங்களில் விவரித்திருக்கிறார். வடமொழி நூல்கள் பலவற்றுள்ளும் இந்த நாமங்கள் கையாளப்பட்டுள்ளன. ஸ்ரீ பட்டர், வடமொழி நூல்களுள் இந்நாமங்கள் பயிலப்பட்ட இடங்களைத் தேடியெடுத்து, ஆழ்வார்கள் அருளிச் செயல்களையும் உளங்கொண்டு, ஆழ்வார்கள் பாசுரங்களுக்கு ஆசாரியர்கள் அருளியவியாக்கியானங்களையும் தழுவி அந்த நாமங்களுக்கு அற்புதமான உரையருளியிருக்கிறார். வடமொழி பயின்ற பண்டிதர்க்கு ஸ்ரீ பட்டரின் ''பகவத்குண தர்ப்பணம்'' ஒரு பெருவிருந்தாகத் திகழ்கிறது

அவ்வாயிர நாமங்கள் வைணவக்கோயில்களிலெல்லாம் அர்ச்சனையின் போது கூறப்பெறுகின்றன. ஆனால் வடமொழியில் நல்ல பாண்டித்யம் உடையவர்க்கல்லது அந்நாமங்களின் பொருள் நன்கு தெரிய அரியதாயிருக்கிறது. இறைவனைப் போற்றுங்கால் அந்த நாமங்களின் ஒலி மட்டுமே போதும், பொருள் தெரிய வேண்டிய அவசியமில்லை, வெறும் உச்சரிப்பே பயன் தரும் என்பதை மறுக்கவில்லை; யாரும் மறுக்கவும் முடியாது நாமங்களின் மகிமையே அது. எனினும், நாம் கூறும் நாமம் இன்ன பொருளை உடையது என்று நாமும் அறிந்து கொண்டால் அந் நாமத்தைக்கூறி அவனைப் போற்றும் போது நாமறிய நம்மனமும் அந்த நாமத்தோடு ஒன்றி

நிற்கும், அதன் பயனாக நம் மனநிறைவும் மிகுதிப்படும் அல்லவா? இந்த ஒரே நோக்கோடு தான் 'திருமால் போற்றித்திரு வகவல்' என்ற இந்நூல் வெளிவருகின்றது.

இவ்வாயிர நாமங்களையும், ஸ்ரீ பட்டர் வியாக்கியானத்தைத் தழுவித் தமிழில் மொழி பெயர்க்க வேண்டும் என்ற அவா அடியேனுக்கு இறைவன் அருளால் சில வருஷங்களுக்கு முன் ஏற்பட்டது. வடமொழி கொஞ்சமும் அறியாதவன் அடியேன். எனினும் மேற்சொன்ன ஆர்வம் அடியேனை ஆட்கொண்டு ஆட்டியது. அதன் பலனாக வடமொழி கற்றவர் துணை கொண்டு ஸ்ரீபட்டர் பாஷ்யத்தை ஓரளவு தெரிந்து அதன் தமிழ் உரையை அகவல் சீரில் அமைத்து முதல் மூன்று சீர்களில் அந்தந்த நாமத்துக்கு ஸ்ரீபட்டர் அருளிய பொருளை அமைக்க முயன்றிருக்கிறேன்: பலவிடங்களில் முழுதும் அமைப்பது கடினமாயிருந்தது முடிந்தவிடமெல்லாம் அமைத்தேன். முடியாதவிடத்து, அவ்வியாக்-கியானத்தின் சாயையிலே அமைத்திருக்கிறேன். எவ்வளவு தூரம் வெற்றி பெற்றேன் என்பதை ஆஸ்திகர்கள் தான் கூறமுடியும். பல விடங்களில் அடியேனை யறியாது தவறுகள் இருக்கலாம் "சீலமில்லாச் சிறியனேலும் செய்வினையோ பெரிதால்' என்றார் நம்மாழ்வார். ஆகவே ஆஸ்திகப் பெரியோர்கள் விஷய கௌரவத்தையும், அடியேனுடைய ஆர்வத்தின் முயற்சியையும் மட்டுமே கணிசித்து அத் தவறுகளைப் பொருட்படுத்த மாட்டார்கள் என்றே நம்புகிறேன் தவறைமன்னித்து விடுவதோடு நில்லாமல், தவறுகளை அடியேனுக்கு இடித்துக்கூறி அடியேனைத் திருத்தவும் அவர்களே உரியவர்களாதலால் அத்தவறுகளைக் குறித்தெழுதி மறுபதிப்பிலாவது அவை நிழழாதவாறு செய்ய வேண்டும் என்று ஆஸ்திகப் பெரியோர்களின் திருவடித்தாமரைகளை வந்தித்து வேண்டிக்கொள்கிறேன்.

அடியேன் இந்த நூலை, அடியேனுடைய ஆசார்யர் ஸ்ரீவானமாமலை மடத்தின் பீடாதிபதி ஸ்ரீ சின்னக் கலியன் ராமானுஜஸ்வாமி இவ்வி பூதியில் எழுந்தருளியிருந்த காலத்திலேயே செய்து, அம் மஹானுடைய அனுக்கிரகமும் ஆசியும் பெற்று வெளியிடும் பாக்யம் பெறுமல் போனேனே என்று மிகவும் வருந்தியதுண்டு. அந்தக் குறையை திருக்குறுங்குடி மடத்தில் பீடாதிபதியாய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பேருளாள ராமானுஜஜீயர்ஸ்வாமிகள் பரிபூர்ணமாகப் போக்கி. என் முயற்சியை அநுக்ரஹித்து ஆசீர்வதித்து ஆதரவும் அளித்தார்கள். அந்த ஸ்வாமியின் அனுக்ரஹத்தோடும். ஆதரவோடும் தான் இந்நூல் வெளிவருகிறது. பொருளல்லாத என்னைப் பொருளாக்கி இம் முயற்சியில் என்னை அஞ்சலென்றருளித்தட்டிக் கொடுத்து ஊக்குவித்த அம்மஹானுக்குத் "தலையல்லால் கைமாறிலேன்" அம்மஹானுடைய திருவுருவம் இந்நூலை அலங்கரிக்கின்றது.

வடமொழிப் பயிற்சி சிறிதுமில்லாத அடியேனுக்கு முழுதும் பக்கபலமாய் நின்று, ஸ்ரீபட்டர் வியாக்கியான முழுவதையும் அடியேனுக்குப் படித்துக் கூறி, அடியேனுடைய மொழி பெயர்ப்பு அவ் வியாக்கினத்தோடு ஒட்டாத விடங்களை எல்லாம் சுட்டி மாற்றியமைக்கச்செய்து, மொழிபெயர்ப்பைப் பல தடவை நகல் செய்து, அச்சுப் பிரதி பரிசீலித்து, இன்னும் பல வகையில் இம் முயற்சியில் அடியேனுக்குதவிய, பாளையங்கோட்டை கதீட்ரல் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர், சமப்பிரதான வித்வான் ஸ்ரீ N. S. கிருஷ்ணனுக்கு அடியேன் உளம் கனிந்த நன்றி கூறிக்கொள்வதைவிட 'அறியேன் ஒரு கைமாறே'. ஸ்ரீ பட்டர் வியாக்யானப்படி தமிழிலே 'விஷ்ணு ஸஹஸ்ரநாம உரை'' என்று ஒரு வசன மொழி பெயர்ப்பு ஒன்றை ஸ்ரீ காஞ்சி பிரதிவாதி பயங்கரம் ஸ்ரீ P. B. அண்ணங்கராசாரியார் ஸ்வாமி வெளியிட்டிருக்கிறார். அந்த நூலும் அடியேனுடைய முயற்சிக்கு ஒரு உறுதுணையாக மிகவும் உதவியது. இம் முயற்சியை ஸ்ரீ ஸ்வாமியிடம் விண்ணப்பித்தபோது அவர்களும் அடியேனை இதில் ஊக்குவித்தார்கள், நூலுக்கு ஒரு ஸ்ரீ முகமும் அருளியிருக்கிறார்கள், அதேபோல் ஆழ்வார்களின் பாசுரங்களிலே தன்னைப் பறிகொடுக்கும் மனப்பாங்குள்ள சென்னை பிரபல அட்வொகேட் ஸ்ரீ D. ராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமியும் அடியேனை ஆசிர்வதித்து ஸ்ரீ முகம் அருளியிருக்கிறார்கள் அந்த இருஸ்வாமிகள் திருவடிகளை ஸ்மரித்து அடியேனுடைய க்ருதக்ஞதையைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்னை அறநிலைய அமைச்சர் ஸ்ரீ எம். பக்தவத்சலம் அவர்களும் இந் நூலுக்கு ஒரு மதிப்புரை வழங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கும் அடியேனுடைய நன்றி மேலும், நெல்லையில் நாராயண கதை உபன்யாசம் செய்பவந்த விடத்தே அடியேனிடம் விசேஷ நண்பு செய்து இந்நூலின அச்சுப்பிரதிகளைப் பார்வையிட்டுத் திருத்தி உதவிய திருவெண்காடு ஸ்ரீ T. K. முத்துஸ்வாமி சாஸ்திரிகளுக்கும் அடியேனுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வடமொழி அச்சுப் பயிற்சியில்லாத நெல்லையில் வடமொழி அச்சுக்கள் வாங்கி வைப்பித்து, அச்சானவற்றைப் பரிசோதித்து உதவிய நெல்லை ஸ்ரீ ஆண்டி வாத்தியார் அவர்களுக்கும் அடியேனுடைய நன்றி உரித்தாகும்.

அடியேனுடைய இந்நூலைத் தமிழன்னையின் திருமுன்பு ஸமர்ப்பிக்கின்றேன். தமிழன்னையின் திருமுகத்தில் சிறிது மலர்ச்சியாகிலும் காணப்பெற்றதா என்று கண்டுரைக்க வேண்டியவர்கள் தமிழ் நாட்டில் தெய்வ நம்பிக்கையுடையவர்களே.

ஸ்ரீ பட்டர் திருவடிகளே சரணம்

பக்ஷிராஜ ராமானுஜ தாஸன்.

b.

திருக்குருகூர் ஸ்ரீ ஸூக்தி ரத்னகரம் இளையவில்லி சடகோபாசாரியார் உளங்கனிந்தளித்த
அபிநந்தன பத்திரிகை.

ஸ்ரீமான் பக்ஷிராஜய்யங்காரின் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தின் அகவற் செய்கோலாமாயமைந்த செந்தமிழாக்கம் கண்டு பெருமகிழ்வெய்தினேன். வடமொழியாலமைந்த ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமம் ஞானிகளில் தலைவராய பீஷ்மராலே அருளப்பட்டது. அதனை நம்போலியர்கள் பகவத் ஸன்னதியில் சொல்லி, பைந்துழாய்கொண்டு பாதமலரில் பூசனைசெய்யவே ஆயிரமுகத்தினுலும் அருளுவனும் ஸர்வேச்வரன். "ஓராயிரமாய் உலகேழளிக்கும் பேராயிரம் கொண்டதோர் பீடுடையன"ன்றோ நாராயணன். "விண்மீதிருப்பாய்" என்கிற பரத்வபரம் முதுவேதம். "கடல் சேர்ப்பாய்" என்கிற வ்யூஹ பரம் பாஞ்சராத்ரம். வேதமே பாஞ்சராத்ரமாயிற்று. மண் 'மீதுழல்வாய்' என்கிற ராமக்ருஷ்ணுதிகளின் திருவவதாரங்களின்போது வேதமே ஸ்ரீ ராமாயண. ஸ்ரீ மஹாபாரத, ஸ்ரீ விஷ்ணுபுராணுதிகளாக உருப்பெற்றதாம். "மலைமேல் நிற்பாய்" என்கிற அர்ச்சாவதாரமாகத் தன்னை எம்பெருமான் அமைத்துக்கொள்ளும்போது வேதம் செஞ்சொற் கவிகளின் திருவாக்கிலே புகுந்து செந்தமிழாய்த் திகழ்ந்ததாம். இதனால் அர்ச்சாவதாரத்தில் எம்பெருமான்களுக்குத் தமிழிலேயே மிக்க ஆதரமுள்ளது என்பது பெறப்பட்டது. " வலக்கையாழி இடக்கைச் சங்கம் இவையுடைமால் வண்ணனை, மலக்கு நாவுடையேற்கு" என்று ஆழ்வார் திமிர்ந்து பேசும்படியன்றோ இத் தமிழிலே எம்பெருமானுடைய வ்யாமோஹம் இருக்கிறது! ஆகவே வடமொழியிலுள்ள ஸஹஸ்ர நாமத்திலும் இத்தமிழாக்கத்தின் இன்சுவையிலே நெஞ்சைப் பறிகொடுப்பான் எம்பெருமான் என்பது திண்ணம். இப்பரத கண்டத்தில் தமிழ்நடைபோடும் நன்னிலமான இத்தென்பாகத்திலேயே பற்பல விடங்களிலும் எம்பெருமான் கோயில்கொண்டிருப்பது இந்தச்செந்தமிழின் சுவையில் ஆசையாலேயன்றோ!

எம்பெருமானுர் நித்யக்ரந்தம் அருளியிருக்கிறுர். அதில் நல்ல ப்ரபந்தப் பாடல்களாலே எம்பெருமானைப்பாடி இன்புறச் செய்யவேணும், திருவாராதனம் செய்யும்போது என்று

ஸாதித்திருக்கிருர். மற்றும் மந்திர சக்தியாலே தேவதையை வற்புறுத்தி வசீகரிப்பது என்று ஒன்றுண்டு. அம்முறையில் வடமொழி ஸஹஸ்ரநாமம் அவசியமானதுதான். அவனுகப்பையே பலமாகக்கருதும்போது அத்தை விளைவிக்கும் ஆற்றல் இத்தமிழாக்கத்துக்கேயுள்ளதென்ருல் மிகையாகாது,

இத்தமிழாக்கம், "தெருள்கொள் நான் மறைவல்லவர் பலர்வாழ்'' என்றும் "தேறுஞானத்தர்'' என்றும், "செய்வவேள் வியர்வையத்தேவர்'' என்றும், "செந்தொழிலவர்'' என்றும் "தெள்ளியார் திரு நான்மறைகள் வல்லார்'' என்றும் நம்மாழ் வாராலே கொண்டாடப்பட்ட வானமாமலையிலே தோன்றிய இவர் வாயனகள் திருந்தவே வெளியிடப்பட்டதாகையாலே வானமாமலையிலே குன்றத்திலிட்ட விளக்காய் தேசமெல்லாம் திகழும் என்பது திண்ணமே. "வேதாத்மா விஹகேச்வர:'' என்கிற பெரிய திருவடியின் திருப்பெயரைப் புனைந்திருப்பவ ராகையாலே இவர் வாக்கே வேதவாக்காகிறது. ''காக்கை வாயிலும் கட்டுரைகொள்வர்'' என்கிறபோது கருடன் வாயிற் கட்டுரையைச் சிரமேல்தாங்காரோ? இப்பக்ஷிராஜனின் பக்ஷபாதம் தமிழிலே விழுந்துவிட்டது. ஸ்ரீ பராசரபட்டரின் பாஷ்யத்தை அடியொற்றி இப்பக்ஷி ஆயிரம்காதம் பிழையறப்பறந் திருப்பது போற்றத்தக்கதாம்: இதில் பத்து நாமங்களுக்கு ஒரு ராகமாக வகுத்து நூறு ராகமாலிகையாக்கி இசையின்பம் படப்பாடினல் பெரிதும் பேரின்பமாயிருக்குமென்றெண்ணு கிறேன். இப்பெரு விருந்தைப்பெற்ற எம்பெருமானும் அவனடியார்களும் இப்பக்ஷிராஜாவுக்கு ஜடாயு ஸம்பாதி போலே நெடிய ஆயுளையும் தந்து இத்தகைத் திருப்பணிகளைப் பற்பல்லாயிரமாகச் செய்துவித்துக்கொண்டு பின்பு பேரின்ப வீடும் பெற்று இன்புற்று வாழ அருள் செய்வார்களாக.

இந்தப் புத்தகந்தன்னிலேயே வடமொழி நாமங்களையும் வரிசையாய்க் காட்டியிருப்பது போற்றத்தக்கது. தமிழன்பருக்கும் வடமொழியில் பற்றுதல் உண்டாகும் வகையிலே இது உபகரிக்கிறது. "சொற்பொருளாளீர் சொல்லுகேன் வம்மின்... நற்பொருள் காண்மின் பாடி நீருய்ம்மின் நாராயண என்னும் நாமம்'' என்பதை இங்குப் பறைசாற்றி நிற்கின்றேன்.

இளையவில்லி சடகோபதாஸன்,

ஆழ்வார்திருநகரி.

19—2—'61.

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமம்
திருமால் போற்றித் திருவகவல்

ஓம்

1	विश्वम्	விச்வம்	அனைத்துள உலகு மானாய்	போற்றி
2	विष्णुः	விஷ்ணு:	பொருளெலாங் கரந்து பரந்துளாய்	,,
3	वषट्कारः	வஷட்கார:	எப்பொருளினையும் இயக்குவாய்	,,
4	भूतभव्यभवत्प्रभुः	பூதபவ்யபவத்ப்ரபு:	முக்காலத் தலைவ முதல்வ	,,
5	भूतकृत्	பூதக்ருத்	பலவும் உன்னிப் படைப்பாய்	,,
6	भूतभृत्	பூதப்ருத்	தன்படைப் பனைத்தும் தாங்குவாய்	,,
7	भावः	பாவ:	பொருளெலாம் அணியாப் பூண்டாய்	,,
8	भूतात्मा	பூதாத்மா	உடலாய் அனைத்தையும் உகந்தாய்	,,

9	भूतभावनः	பூதபாவந:	பொறையளி யாலவை வளர்ப்பாய்	போற்றி
10	पूतात्मा	பூதாத்மா	துன்பொடின் பணுகாத் தூயோய்	,,
11	परमात्मा	பரமாத்மா	தனக்கிறை தானாய்த் தழைத்தாய்	,,
12	मुक्तानां परमा गतिः	முக்தாநாம் பரமா கதி:	முத்தர் சேர்பத முடிவே	,,
13	अव्ययः	அவ்யய:	அடியவர்ப் பிரிதல் ஆற்றாய்	,,
14	पुरुषः	புருஷ:	யாவும் அளித்திடும் இறைவா	,,
15	साक्षी	ஸாக்ஷீ	களிபெற முத்தரைக் காண்பாய்	,,
16	क्षेत्रज्ञः	க்ஷேத்ரஜ்ஞ:	அழியா வீட்டுல கறிந்தவ	,,
17	अक्षरः	அக்ஷர:	ஈடிலா வுயர்நல மேந்தினாய்	,, ௨
18	योगः	யோக:	உயர்வீ டளிக்கும் உபாயமே	,,
19	योगविदां नेता	யோகவிதாம்நேதா	பத்தர்ப் பலனளி பரமா	,,
20	प्रधानपुरुषेश्वरः	ப்ரதான புருஷேச்வர:	பாரொடு படைப்பையும் பணிப்பாய்	,,
21	नारसिंहवपुः	நாரஸிம்ஹவபு:	மானுட மடங்கலாய் வந்தாய்	,,
22	श्रीमान्	ஸ்ரீமாந்	அரியு ருவான அழகனே	,,
23	केशवः	கேசவ:	அணிபெறு நீள்குழ லழகனே	,,
24	पुरुषोत्तमः	புருஷோத்தம:	மூவகைக் குழுவின் முதல்வா	,,

			யாவையும் எவற்றையும்	
25	सर्वः	ஸர்வ:	பல்லுயிர்ப் பகையும் பாறுவாய்	,,
26	शर्वः	சர்வ:	அனைத்துயிர் மங்கல மானாய்	,,
27	शिवः	சிவ;	நிலைத்தருள் கருணை நிறைந்தாய்	,,
28	स्थाणुः	ஸ்தாணு:	பல்லுயிர் விழை பரம்பொருளே	,,
29	भूतादिः	பூதாதி:	மன்பதைக் கெய்ப்பினில் வைப்பே	,,
30	निधिरव्ययः	நிதிரவ்யய:	உற்றுழி யிழிந்துல கோம்புவாய்	,,
31	सम्भवः	ஸம்பவ:	துன்பொழித் தின்பளி தோன்றால்	,,
32	भावनः	பாவந:	தன்னையே தமர்க்களி தயாளா	,,
33	भर्ता	பர்த்தா	உன்னதப் பல்பிறப் புடையாய்	,,
34	प्रभवः	ப்ரபவ:	இறங்கியும் பலனெலா மீவாய்	,,
35	प्रभुः	ப்ரபு:	தோற்றத் திறைநிலை துலக்குவாய்	,,
36	ईश्वरः	ஈச்வர :	இச்சையால் பிறவி எடுப்பாய்	,,
37	स्वयम्भूः	ஸ்வயம்பூ:	குணங்களா லின்பம் கொடுப்பாய்	,,
38	शम्भुः	சம்பு:	இரவி நடுவுறை இறைவா	,,
39	आदित्यः	ஆதித்ய:	செவ்விய தாமரைச் செங்கணா	,,
40	पुष्कराक्षः	புஷ்கராக்ஷ:		

ல

41	महास्वनः	மஹாஸ்வநः	உயர்மறை யொலிதனை யுடையாய்	போற்றி
42	अनादिनिधनः	அநாதிநிதநः	ஆதி ,யந் தமில், லவனே	,,
43	धाता	தாதா	உடலா யயனை உடையாய்	,,
44	विधाता	விதாதா	பண்டுநான் முகனையும் படைத்தாய்	,,
45	धातुरुत्तमः	தாதுருத்தமः	அயனிற் சீரிய அண்ணல்	,,
46	अप्रमेयः	அப்ரமேயः	அயனும் காண்டற் கரியாய்	,,
47	हृषीकेशः	ஹ்ருஷீகேசः	இந்தியம் நின்பா லீர்ப்பாய்	,,
48	पद्मनाभः	பத்மநாபः	பூமா னுறைமலர்ப் போகிலாய்	,,
49	अमरप्रभुः	அமரப்ரபுः	அயன்முதல் தேவர்க் கதிபா	,,
50	विश्वकर्मा	விச்வகர்மா	அனைத்துமுன் செயலா யமைந்தாய்	,,
51	मनुः	மநுः	மழுங்கலில் ஞானம் வாய்ந்தாய்	,,
52	त्वष्टा	த்வஷ்டா	வகைப்பட உலகுயிர் வகுப்பாய்	,,
53	स्थविष्ठः	ஸ்தவிஷ்டः	விழியுணர் பொருள்களாய் விரிந்தாய்	,,
54	स्थविरः	ஸ்தவிரः	எக்கா லத்தும் இருப்பாய்	,,
55	ध्रुवः	த்ருவः	பலவா யும்முதல் பழுதுருய்	,,
56	अग्राह्यः	அக்ராஹ்யः	ஆரும் பற்றற் கரியாய்	,,

57	शाश्वतः	சாச்வத:	ஓய்விலா லீலை உடையாய்	போற்றி
58	कृष्णः	க்ருஷ்ண:	மன்பதைப் படைப்பில் மகிழ்வாய்	,,
59	लोहिताक्षः	லோஹிதாக்ஷ:	கமலச் செய்ய கண்ணா	,,
60	प्रतर्दनः	ப்ரதர்தந:	ஒன்றிலா தூழியி லொழிப்பாய்	,,
61	प्रभूतः	ப்ரபூத:	ஒன்றொழி யாநிறை வுடையாய்	,,
62	त्रिककुब्धामा	த்ரிககுப்தாமா	முப்பா தப்பதமுடையாய்	,,
63	पवित्रम्	பவித்ரம்	தூய்மையே வடிவாய்ச் சுடர்வாய்	,,
64	मङ्गलं परम्	மங்களம் பரம்	மங்கல குணங்கள் மலிந்தாய்	,,
65	ईशानः	ஈசான:	நிலைபெறுத் தும்வலி நிறைந்தாய்	,,
66	प्राणदः	ப்ராணத:	அடிபணி பாண்மை யருள்வாய்	,,
67	प्राणः	ப்ராண:	உனையடைந் தார்கட் குயிரே	,,
68	ज्येष्ठः	ஜ்யேஷ்ட:	முதல்வ னாதலின் மூத்தோய்	,,
69	श्रेष्ठः	ச்ரேஷ்ட:	சூரிகள் துதியால் துலங்குவாய்	,,
70	प्रजापतिः	ப்ரஜாபதி:	தகவுடை நித்தர் தலைவ	,,
71	हिरण्यगर्भः	ஹிரண்யகர்ப்ப:	பொன்னுலகாம் பதம் வாழ்வாய்	,,
72	भूगर्भः	பூகர்ப்ப:	அவனி துயருறா தளிப்பாய்	,,

௫

73	माधवः	மாதவ:	கேழில் மலர்மகள் கேள்வ	போற்றி
74	मधुसूदनः	மதுஸூதந:	மதுவெனும் அரக்கனை மாய்த்தாய்	,,
75	ईश्वरः	ஈச்வர:	எண்ணிய தூறிலா தெய்துவாய்	,,
76	विक्रमी	விக்ரமீ	வரம்பில் ஆற்றல் வாய்ந்தாய்	,,
77	धन्वी	தந்வீ	சார்ங்க வில்லினைத் தரித்தாய்	,,
78	मेधावी	மேதாவீ	அனைத்தும் இயல்பில் அறிவாய்	,,
79	विक्रमः	விக்ரம:	உவணப் புள்ளினை ஊர்ந்தாய்	,,
80	क्रमः	க்ரம:	நிறைந்தே எவற்றினு நின்றாய்	,,
81	अनुत्तमः	அநுத்தம:	தனிலுயர்ந் தவரில் தலைவனே	,,
82	दुराधर्षः	துராதர்ஷ:	ஆரும் வெல்லற் கரியாய்	,,
83	कृतज्ञः	க்ருதஜ்ஞ:	புன்மையாம் பூசையும் போற்றுவாய்	,,
84	कृतिः	க்ருதி:	போற்றிடப் புகுத்திடும் புண்ணியமே	,,
85	आत्मवान्	ஆத்மவாந்	உன்னுவார் செல்வமா உவந்தாய்	,,
86	सुरेशः	ஸுரேச:	அயர்வறு மமரர் அதிபதி	,,
87	शरणम्	சரணம்	அடியடை யும்வழி யானாய்	,,
88	शर्म	சர்ம	அடையப் படும்பலன் ஆனாய்	,,

89	विश्वरेताः	விச்வரேதா:	அவனி முதற் காரணமே	போற்றி
90	प्रजाभवः	ப்ரஜாபவ:	உன்னதால் உனையுறற் குறையுளே	,,
91	अहः	அஹ:	பன்மா யம்தொலை பகலே	,,
92	संवत्सरः	ஸம்வத்ஸர:	மாயத் துயிரொடும் வசிப்பாய்	,,
93	व्यालः	வ்யாள:	இன்புடன் அடியரை ஏற்பாய்	,,
94	प्रत्ययः	ப்ரத்யய:	அன்பர் தமக்கு நம்பனே	,,
95	सर्वदर्शनः	ஸர்வதர்சந:	காலத் துன்படி காட்டு வாய்	,,
96	अजः	அஜ:	தனையடை வார்தடை தகர்ப்பாய்	,,
97	सर्वेश्वरः	ஸர்வேச்வர:	தேடுவார்ச் சென்று சேர்வாய்	,,
98	सिद्धः	ஸித்த:	விரகு வேண்டா விழுநிதி	,,
99	सिद्धिः	ஸித்தி	பல்துறைப் பத்திப் பலனே	,,
100	सर्वादिः	ஸர்வாதி	எப்பலன் கட்கும் ஏதுவே	,,
101	अच्युतः	அச்யுத;	அடியார் தமைவிட் டகலாய்	,,
102	वृषाकपिः	வ்ருஷாகபி:	அறவுரு வாதிவ ராகனே	,,
103	अमेयात्मा	அமேயாத்மா	அன்பர்க் களியள வில்லாய்	,,
104	सर्वयोगविनिस्सृतः	ஸர்வயோகவிநிஸ்ஸ்ருத	எணிற்றுறை எய்த எளியோய்	,,

105 वसुः	வஸு:	அடியோ ருடன்உறை அன்பா	போற்றி
106 वसुमनाः	வஸுமநா:	நிதியா அடியரை நினைவாய்	,,
107 सत्यः	ஸத்ய:	முத்தர் விருப்பம் முடிப்பாய்	,,
108 समात्मा	ஸமாத்மா:	ஒன்று அடியரை உள்ளுவாய்	,,
109 सम्मितः	ஸம்மித:	அடியவர்க் கடங்கி அருள்வாய்	,,
110 समः	ஸம:	பழையரும் புதியரும் பாராய்	,,
111 अमोघः	அமோக:	பார்க்க, வழுத்தப் பழுதிலாய்	,,
112 पुण्डरीकाक्षः	புண்டரீகாக்ஷ:	புண்டரி கத்தவர் கண்ணே	,,
113 वृषकर्मा	வ்ருஷகர்மா	கொடுமுத் தாபம் குளிர்ப்பாய்	,,
114 वृषाकृतिः	வ்ருஷாக்ருதி:	வருத்தமாற்றிக் குளிர் வடிவினாய்	,,
115 रुद्रः	ருத்ர:	சேதனர் மகிழ்ந்தழச் செய்வாய்	,,
116 बहुशिराः	பஹுசிரா:	பல்தலைச் சேடனைப் பவித்தாய்	,,
117 बभ्रुः	பப்ரு;	தரணியைச் சேடனைத் தாங்குவாய்	,,
118 विश्वयोनिः	விச்வயோநி:	நினைப்போல் அடியரை நினைவாய்	,,
119 शुचिश्रवाः	சுசிச்ரவா:	தமர் குரற் குச்செவி சாய்ப்பவ	,,
120 अमृतः	அம்ருத:	அடியவர்க் காரா வமுதே	,,

121	शाश्वतस्थाणुः	சாச்வதஸ்தாணு:	அழிவிலா தடியருள் உறைவாய்	போற்றி
122	वरारोहः	வராரோஹ:	சேர்விடம் எவற்றிலும் சிறந்தோய்	,,
123	महातपाः	மஹாதபா:	உலப்பில் ஞான முடையாய்	,,
124	सर्वगः	ஸர்வக:	பொன்றுவ ஏற்றுப் பொறுப்டாய்	,,
125	सर्ववित्	ஸர்வவித்:	பொன்றிய கொடுபுவி புதுக்குவாய்	,,
126	भानुः	பாநு:	படைத்தும் விகாரப் படாதாய்	,,
127	विष्वक्सेनः	விஷ்வக்ஸேந:	கலை கணு உலகுயக் காட்டுவாய்	,,
128	जनार्दनः	ஜநார்தந:	காப்பிடை யூறு களைபவ	,,
129	वेदः	வேத:	அறிவெலா முலகுக் களிப்பாய்	,,
130	वेदवित्	வேதவித்:	உண்மை மறைப்பொருள் உணர்வோய்	,,
131	अव्यङ्गः	அவ்யங்க:	நிரம்பவா றங்கமும் நிறைந்தாய்	,,
132	वेदाङ्गः	வேதாங்க:	மறை வழியா வுணர் மாண்பனே	,,
133	वेदवित्	வேதவித்:	மறைமுறை பூசையா மகிழ்வோய்	,,
134	कविः	கவி:	பல்லுயிர் பல்பொருள் பார்ப்போய்	,,
135	लोकाध्यक्षः	லோகாத்யக்ஷ:	உயர்ந்தார் பால்நோக் குடையாய்	,,
136	सुराध्यक्षः	ஸுராத்யக்ஷ:	அறத்துளோர் தேவினுக் கதிபதீ!	,,

137	धर्माध्यक्षः	தர்மாத்யக்ஷ:	புரிசெயல் பலனுற அருள்வாய்	போற்றி
138	कृताकृतः	க்ருதாக்ருத:	நித்தா நித்த நெறியே	,,
139	चतुरात्मा	சதுராத்மா	நால்வகை மூர்த்தியா நல்கினாய்	,,
140	चतुर्व्यूहः	சதுர்வ்யூஹ:	அவத்தைகள் நான்கும் ஆனாய்	,,
141	चतुर्दंष्ट्रः	சதுர்தம்ஷ்ட்ர:	நால்வகை எயிறுடை நாதனே	,,
142	चतुर्भुजः	சதுர்புஜ:	புய நான்குடைய புனிதனே	,,
143	भ्राजिष्णुः	ப்ராஜிஷ்ணு:	தொழுபவர்க் குளத்தே தோன்றுவாய்	,,
144	भोजनम्	போஜநம்:	அடியார்க் கின்னுண வானாய்	,,
145	भोक्ता	போக்தா	ஏதுமன் போடிடில் ஏற்பாய்	,,
146	सहिष्णुः	ஸஹிஷ்ணு:	குற்றம் பொறுக்கும் குணியே	,,
147	जगदादिजः	ஜகதாதிஜ:	உலக காரணத் தொருவனே	,,
148	अनघः	அநக:	இழியினும் பாபம் இல்லாய்	,,
149	विजयः	விஜய:	அயனரன் வலிகுறைத் தாள்பவ	,,
150	जेता	ஜேதா	அயனரன் தம்வலியடக்கி யோய்	,,
151	विश्वयोनिः	விச்வயோநி:	அயனரன் தொழிலுல காதியே	,,
152	पुनर्वसुः	புநர்வஸு:	அயனரன் பால்கர ந் தமைந்தாய்	,,

153	उपेन्द्रः	உபேந்த்ர:	இந்திரன் இளையனு இழிந்தாய்	போற்றி
154	वामनः	வாமந:	மாண்பமை குறளனு வந்தாய்	,,
155	प्रांशुः	ப்ராம்சு;	வந்துடன் நீண்டு வளர்ந்தாய்	,,
156	अमोघः	அமோக:	அழுத்திப் பலியை அளித்தாய்	,,
157	शुचिः	சுசி:	கைம்மாறில்லாக் கருணையோய்	,,
158	ऊर्जितः	ஊர்ஜித:	மாற்ருர் மறந்தொலை வலியோய்	,,
159	अतीन्द्रः	அதீந்த்ர:	இந்திரன் தன்னை இகந்தோய்	,,
160	संग्रहः	ஸங்க்ரஹ:	எய்த அடியார்க் கெளியாய்	,,
161	सर्गः	ஸர்க:	தனைத்தான் பிறத்தித் தாங்குவாய்	,,
162	धृतात्मा	த்ருதாத்மா	உயிர் கடைத்தேற உதவுவாய்	,,
163	नियमः	நியம:	அடியவர் பகைவரை அடக்குவாய்	,,
164	यमः	யம:	ஒளி நின்றெல்லாம் ஊக்குவாய்	,,
165	वेद्यः	வேத்ய:	பெருமை தோன்றிடப் பிறப்பாய்	,,
166	वैद्यः	வைத்ய:	பிறப்பிறப் பறுக்கும் பிடக்கே	,,
167	सदायोगी	ஸதாயோகீ	ஓய்விலா தனி தவம் உகந்தாய்	,,
168	वीरहा	வீரஹா	நாத்திகர் தமக்கு நமனே	,,

169	माधवः	மாதவ:	"மா" எனும் ஞானம் வழங்குவாய்	போற்றி
170	मधुः	மது:	அடியவர்க் கமுதென அண்ணிப்பாய்	,,
171	अतीन्द्रियः	அதீந்த்ரிய:	புலன்களுக் கெட்டாப் புனித	,,
172	महामायः	மஹாமாய:	வன்பெருமாயம் வல்லாய்	,,
173	महोत्साहः	மஹோத்ஸாஹ:	காப்பினூக் கம்மிகக் காட்டுவாய்	,,
174	महाबलः	மஹாபல:	வலிமையனைத்தும் வல்லாய்	,,
175	महाबुद्धिः	மஹாபுத்தி:	கணத்தினில் நடப்பெலாம் காண்பாய்	,,
176	महावीर्यः	மஹாவீர்ய:	எதனினும் விகாரம் எய்தாய்	,,
177	महाशक्तिः	மஹாசக்தி:	சீரிய சத்தி சிறந்தாய்	,,
178	महाद्युतिः	மஹாத்யுதி:	பொங்கிடு தேசுடன் பொலிவாய்	,,
179	अनिर्देश्यवपुः	அநிர்தேச்யவபு:	உவமையுரைபெறா உருவ!	,,
180	श्रीमान्	ஸ்ரீமாந்	உலப்பில் பல்கலன்களோ டொளிர்வாய்	,,
181	अमेयात्मा	அமேயாத்மா	அளப்பரும் தன்மையமைந்தாய்	,,
182	महाद्रिधृत्	மஹாத்ரித்ருத்	தாங்கரு மந்தரம் தரித்தாய்	,,
183	महेष्वासः	மஹேஷ்வாஸ:	வியப்புறச் சரங்கள் விடுபவ ?	,,
184	महीभर्ता	மஹீபர்த்தா	தரணியை ஆமையாய்த் தாங்கினாய்	,,

185 श्रीनिवासः	ஸ்ரீநிவாஸ:	அலர் மகள் உறைதரும் அகலனே	போற்றி
186 सतांगतिः	ஸதாம்கதி:	சாது சனங்களின் தஞ்சமே	,,
187 अनिरुद्धः	அநிருத்த:	ஊறிலா விளையாட்டுடையாய்	,,
188 सुरानन्दः	ஸுராநந்த:	தேவரைக் களிப்புறச் செய்பவ	,,
189 गोविन्दः	கோவிந்த:	தேவர் துதிபெறச் சிறந்தாய்	,,
190 गोविदां पतिः	கோவிதாம் பதி:	மறைநவிலந்தணர் வாழ்வே	,,
191 मरीचिः	மரீசி:	காசிலா நின்னுருக் காட்டுவாய்	,,
192 दमनः	தமந:	சோதியால் துன்பினைத்துடைப்பவ!	,,
193 हंसः	ஹம்ஸ:	அன்னமாய் அவதரித் தருள்பவ	,,
194 सुपर्णः	ஸுபர்ண:	பொற்சிறை பற்பல உடையாய்	,,
195 भुजगोत्तमः	புஜகோத்தம:	ஒள்ளரா மேற்றுயில் உத்தம	,,
196 हिरण्यनाभः	ஹிரண்யநாப:	ஒண்பொன் நாபி உடையாய்	,,
197 सुतपाः	ஸுதபா:	திப்பிய ஞானத் திருவுரு	,,
198 पद्मनाभः	பத்மநாப:	உந்தியில் கமலம் உடையாய்	,,
199 प्रजापतिः	ப்ரஜாபதி:	நாபியில் உதிப்பவர் நாத	,,
200 अमृत्युः	அம்ருத்யு:	இறப்பை ஒழிக்கும் ஏந்தால்	,,

201	सर्वदृक्	ஸர்வத்ருக்	பல்வகைப் பொருளையும் பார்ப்பாய்	போற்றி
202	सिंहः	ஸிம்ஹ:	சிங்க உருவில் திகழ்ந்தாய்	,,
203	संधाता	ஸந்தாதா	அடியரைத் தன்னோ டணைப்பாய்	,,
204	संधिमान्	ஸந்திமாந்	ஒழிவிலா தடியரோ டுறைவாய்	,,
205	स्थिरः	ஸ்திர:	அடியர் பால் நிலைத்த அன்பினாய்	,,
206	अजः	அஜ:	உயிர் போல் பிறவா உத்தம	,,
207	दुर्मर्षणः	துர்மர்ஷண:	மாற்றார் தாங்கரு வலியோய்	,,
208	शास्ता	சாஸ்தா	கனக்கப் பகைவரைக் கடிவாய்	,,
209	विश्रुतात्मा	விச்ருதாத்மா	கனியெனச்செவிநிறை காதையாய்	,,
210	सुरारिहा	ஸுராரிஹா	அமரர் பகைவனை அழித்தாய்	,,
211	गुरुर्गुरुतमः	குருர்குருதம:	குருவென்போர்க்கெலாம் குருவே	,,
212	धाम	தாம	எவைக்கும் இடமாய் இருப்பாய்	,,
213	सत्यः	ஸத்ய:	உத்தமர்க்கூழியிலுதவுவாய்	,,
214	सत्यपराक्रमः	ஸத்ய பராக்ரம:	மெய்யே வலியாய் விளைப்பாய்	,,
215	निमिषः	நிமிஷ:	தீயோர் பால் கண்திறவாய்	,,
216	अनिमिषः	அநிமிஷ:	கூடினர் பால் கண் கொட்டாய்	,,

217	स्रग्वी	ஸ்ரக்வீ	வண்ணவை ஜயந்தி மாலையாய்	போற்றி
218	वाचस्पतिः	வாசஸ்பதி:	வேதப்பொருளை விரித்தோய்	,,
219	उदारधीः	உதாரதீ:	செம்மையா ஞானம் சிறந்தோய்	,,
220	अग्रणीः	அக்ரணீ:	உயர் கதிக்கு அன்பரை உயர்த்துவாய்	,,
221	ग्रामणीः	க்ராமணீ:	முத்தர் குழுவின் முதல்வ	,,
222	श्रीमान्	ஸ்ரீமாந்	குறையா மேன்மைக்குன்றே	,,
223	न्यायः	ந்யாய:	நீதி வழுவா நெறியோய்	,,
224	नेता	நேதா	இன்னடியார்க் கரையேற்றுவாய்	,,
225	समीरणः	ஸமீரண:	சிறந்த மாயச்செய்கையாய்	,,
226	सहस्रमूर्धा	ஸஹஸ்ரமூர்த்தா	உலப்பிலா பஃறலை யுடையாய்	,,
227	विश्वात्मा	விச்வாத்மா	அனைத்துலகும் நிறை ஆத்தும	,,
228	सहस्राक्षः	ஸஹஸ்ராக்ஷ:	உலப்பிலாக் கண்கள் உடையாய்	,,
229	सहस्रपात्	ஸஹஸ்ரபாத்	அளப்பரும் கால்கள் அமைந்தாய்	,,
230	आवर्तनः	ஆவர்த்தந:	சுழல் பிறப்பாழி சுழற்றுவாய்	,,
231	निवृत्तात्मा	நிவ்ருத்தாத்மா	உலகியல் கடந்த உத்தம	,,
232	संवृतः	ஸம்வ்ருத:	உணர்விலார் காணு தொளிப்பாய்	,,

233	सम्प्रमर्दनः	ஸம்ப்ரமர்த்தந:	அன்பர்க்கு மாயையை அழிப்பாய்	போற்றி
234	अहस्संवर्तकः	அஹஸ்ஸம்வர்த்தக:	பகல் முதல் காலம் படைத்தாய்	,,
235	वह्निः	வஹ்நி:	யாரையும் தாங்கி ஏற்பாய்	,,
236	अनिलः	அநில:	உலகனைத்தும் உயிர் ஊட்டுவாய்	,,
237	धरणीधरः	தரணீதர:	தரணியனைத்தும் தாங்குவாய்	,,
238	सुप्रसादः	ஸு ப்ரஸாத:	அன்பர்க்களவிலாதருள்வாய்	,,
239	प्रसन्नात्मा	ப்ரஸந்நாத்மா	தெள்ளத்தெளிந்த சிந்தையாய்	,,
240	विश्वसृक्	விச்வஸ்ருக்	பல்லுலகத்தையும் படைத்தாய்	,,
241	विश्वभुग्विभुः	விச்வபுக்விபு:	உலகம் உள். புறம்பரந் துய்ப்பவ	,,
242	सत्कर्ता	ஸத்கர்த்தா	நல்லரை மதித்து நல்குவாய்	,,
243	सत्कृतः	ஸத்க்ருத:	பண்பரால் பரவப்படுவாய்	,,
244	साधुः	ஸாது:	அன்பர் விரும்பியதாற்றுவாய்	,,
245	जह्नुः	ஜஹ்நு:	பக்தியலார் கண்படாதாய்	,,
246	नारायणः	நாராயண:	உண்மையுயிர்த்தொகையுறையுளே	,,
247	नरः	நர:	அறிவுளவில உலகழிவிலாய்	,,
248	असंख्येयः	அஸங்க்யேய:	உலப்பில் பல் உயிருலகுடையாய்	,,

249	अप्रमेयात्मा	அப்ரமேயாத்மா	பல்பொருள் புறத்துளும் பரந்தாய்	போற்றி
250	विशिष्टः	விசிஷ்ட:	ஒரு தனிப் பெருமை உடையாய்	,,
251	शिष्टकृत्	சிஷ்டக்ருத்	செம்மையா அன்பரைத் திருத்துவாய்	,,
252	शुचिः	சுசி:	தூய்மைதான் தனக்கெனத் துலங்குவாய்	,,
253	सिद्धार्थः	ஸித்தார்த்த:	யாவையும் இயல்பில் இயைந்தாய்	,,
254	सिद्धसङ्कल्पः	ஸித்தஸங்கல்ப:	எண்ணிய எண்ணியாங் கெய்தினாய்	,,
255	सिद्धिदः	ஸித்தித:	அடியவர் நினைப்பவையருள்வாய்	,,
256	सिद्धिसाधनः	ஸித்திஸாதந:	பரவலே பலனாய்ப் பாலிப்பாய்	,,
257	वृषाही	வ்ருஷாஹீ	அணுத் நாள் சிறந்ததா அமைந்தாய்	,,
258	वृषभः	வ்ருஷப:	மனைவாழ் வெரிக்கு மழையே	,,
259	विष्णुः	விஷ்ணு:	அருள்பெற்றார் தமை அகலாய்	,,
260	वृषपर्वा	வ்ருஷபர்வா	குலம்படியாவுடைக் கோயிலாய்	,,
261	वृषोदरः	வ்ருஷோதர:	தருமமே வயிறாய் சமைந்தோய்	,,
262	वर्धनः	வர்த்தந;	வணங்குவார்ப் பேணி வளர்ப்பாய்	,,
263	वर्धमानः	வர்த்தமாந;	அன்பர் வாழ்வு கண்டலர்வாய்	,,
264	विविक्तः	விவிக்த:	செவி நிறை காதை சிறந்தாய்	,,

17

265	श्रुतिसागरः	ச்ருதிஸாகர:	வேத நதிகளின் வேலையே	போற்றி
266	सुभुजः	ஸுபுஜ:	தொண்டர் பரம்பரி தோளாய்	,,
267	दुर्धरः	துர்த்தர:	உரமிலர் உளம் சுமக் கொண்ணாய்	,,
268	वाग्मी	வாக்மீ	செவிக்கினி செஞ்சொல் செப்புவாய்	,,
269	महेन्द्रः	மஹேந்த்ர:	என்று மெவர்க்கும் இறைவ	,,
270	वसुदः	வஸுத:	பொருள் வேட்டோர்க்கு அது பொழிவாய்	,,
271	वसुः	வஸு:	செல்வம் வேண்டார் செல்வமே	,,
272	नैकरूपः	நைகரூப:	அலகில் பல்லுருவ மைந்தாய்	,,
273	बृहद्रूपः	ப்ருஹத்ரூப:	உலகெலாம் பரந்த பேருருவனே	,,
274	शिपिविष्टः	சிபிவிஷ்ட:	ஒளிக்கதிருள்ளும் ஒளிர்வாய்	,,
275	प्रकाशनः	ப்ரகாசந:	வேண்டுவோர் காண விளங்குவாய்	,,
276	ओजस्तेजोद्युतिधरः	ஓஜஸ்தேஜோத்யுதிதர:	ஒளி வலி, கொற்றமுடையாய்	,,
277	प्रकाशात्मा	ப்ரகாசாத்மா	ஒண்மையோர், காணவும் ஒளிர்வாய்	,,
278	प्रतापनः	ப்ரதாபந:	போற்றலர் தம்மைப் பொசுக்குவாய்	,,
279	ऋद्धः	ருத்த:	என்றும் நிறைவே எய்தினாய்	,,
280	स्पष्टाक्षरः	ஸ்பஷ்டாக்ஷர:	தெளிமொழி வேதம் தெரித்தாய்	,,

281	मन्त्रः	மந்த்ர:	உளத்துளை உன்னு வாரோர்புவோய்	போற்றி
282	चंद्रांशुः	சந்த்ராம்சு:	சோர்வழித்தின்பளி தூய்மதீ	,,
283	भास्करद्युतिः	பாஸ்கரத்யுதி:	பகையிருள் பாறும் பரிதியே	,,
284	अमृतांशूद्भवः	அம்ருதாம்சூத்பவ:	ஒளி மதி பிறந்த நல்லுளத்தாய்	,,
285	भानुः	பாநு:	பகலவற்கொளியருள் பானுவே	,,
286	शशबिन्दुः	சசபிந்து:	தீநெறிச் செல்வோர்த் தீய்ப்பாய்	,,
287	सुरेश्वरः	ஸுரேச்வர:	நன்னெறியோர்க்கருள் நாதனே	,,
288	औषधम्	ஔஷதம்	மாற்றரும் பிறவிநோய் மருந்தே	,,
289	जगतस्सेतुः	ஜகதஸ்ஸேது:	இருவினைப் பயனையும் ஈவாய்	,,
290	सत्यधर्मपराक्रमः	ஸத்யதர்மபராக்ரம:	பழுதுறுப் பலநலம் படைத்தாய்	,,
291	भूतभव्यभवन्नाथः	பூதபவ்யபவந்நாத:	எதிர் நிகழ்கழிவினுக்கிறைவ	,,
292	पवनः	பவந:	இயக்கம் வாயுவிற்கீந்தோய்	,,
293	पावनः	பாவந:	புனிதம் தூயவைக்களித்தாய்	,,
294	अनलः	அநல:	ஈந்தும் என்செய்வன் என்றிருப்பாய்	,,
295	कामहा	காமஹா	தனையொழி காதல் தவிர்ப்பாய்	,,
296	कामकृत्	காமக்ருத்	விழை வினைத்தன்பால் விளைப்பவ	,,

297	कान्तः	காந்த:	கண்டார் மனங்கவர் காந்தனே	போற்றி
298	कामः	காம:	அனங்கற் கவ்வலி அளித்தாய்	,,
299	कामप्रदः	காமப்ரத:	வேட்டார் வேட்டவை விளம்புவாய்	,,
300	प्रभुः	ப்ரபு:	யாவர் மனத்தையும் ஈர்ப்பாய்	,,
301	युगादिकृत्	யுகாதிக்ருத்	உகமுடிவுலகு மீண்டுமிழ்வாய்	,,
302	युगावर्तः	யுகாவர்த்த:	மீள நான்குகங்களை விதிப்பாய்	,,
303	नैकमायः	நைகமாய:	பல்வகை மாயம் பயில்வாய்	,,
304	महाशनः	மஹாசந:	உலகு துற்றுற்று உணவ	,,
305	अदृश्यः	அதிர்ஸ்ய:	புனிதரும் காண்பருங் காதையாய்	,,
306	व्यक्तरूपः	வ்யக்தரூப:	அளியினுற் றேன்றுரு வழகனே	,,
307	सहस्रजित्	ஸஹஸ்ரஜித்	உறங்கி யாயிரயுகம் வென்றாய்	,,
308	अनन्तजित्	அநந்தஜித்	பிறர் உணர்வரிய பெருமையாய்	,,
309	इष्टोविशिष्टः	இஷ்டோவிசிஷ்ட:	பேதிலர்த்தா யெனப் பேணுவாய்	,,
310	शिष्टेष्टः	சிஷ்டேஷ்ட:	கற்றவர் விரும்பும் கனியே	,,
311	शिखण्डी	சிகண்டி	சொல்வெலற் கொணுப்புகழ்ச் சூடையாய்	,,
312	नहुषः	நஹுஷ:	மாயையில் உயிர்களை மாட்டுவாய்	,,

313 वृषः	வ்ருஷ:	நல்லரை இன்சொலால் நயப்பவ	போற்றி
314 क्रोधहा	க்ரோதஹா	கோக்குல மொழித்தமை கோபனே	,,
315 क्रोधकृत्	க்ரோதக்ருத்	கோவழிப்பயன் சினம் கொண்டவ	,,
316 कर्ता	கர்த்தா	ஆயிரவாகுவை அழித்தாய்	,,
317 विश्वबाहुः	விச்வபாஹு:	பகையழித்தளிக்கும் பல்கையாய்	,,
318 महीधरः	மஹீதர:	பொறையழித்துலகினைப் பொறுப்பாய்	,,
319 अच्युतः	அச்யுத:	தன்னுயர் நிலையினிற்றவராய்	,,
320 प्रथितः	ப்ரதித:	புவனி நிறைந்த புகழோய்	,,
321 प्राणः	ப்ராண:	உயிர்களுக்கெல்லாம் உயிரே	,,
322 प्राणदः	ப்ராணத:	அமரர்க்கவர் வலி அளித்தாய்	,,
323 वासवानुजः	வாஸவாநுஜ:	வாசவன் தம்பியா வந்தோய்	,,
324 अपांनिधिः	அபாம்நிதி:	கடலைத் தாங்கிக் காத்தவ	,,
325 अधिष्ठानम्	அதிஷ்டாநம்	மந்தரம் நிலைபெற வந்தாய்	,,
326 अप्रमत्तः	அப்ரமத்த:	தொண்டர்ப் புரத்தலிற் சோர்விலாய்	,,
327 प्रतिष्ठितः	ப்ரதிஷ்டித:	தன்னுடைய ஆற்றலில் தங்குவாய்	,,
328 स्कन्दः	ஸ்கந்த:	அரக்கப் பூண்டை அழிப்பாய்	,,

329	स्कन्दधरः	ஸ்கந்ததர:	கந்தனைத் தாங்கு காரண	போற்றி
330	धुर्यः	துர்ய:	தரணிப் பெருஞ்சுமை தாங்குவாய்	,,
331	वरदः	வரத:	வரங்களமரர்க்கு வழங்குவோய்	,,
332	वायुवाहनः	வாயுவாஹந:	உலகுயிர்க் காற்றினை ஊக்குவாய்	,,
333	वासुदेवः	வாஸுதேவ:	அனைத்திலும் நிறைந்து உலகளிப்பாய்	,,
334	बृहद्भानुः	ப்ருஹத்பாநு:	என்றுமெங்கும் ஒளிர் எல்லியே	,,
335	आदिदेवः	ஆதிதேவ:	ஆக்கி விளையாடும் ஆதியே	,,
336	पुरन्दरः	புரந்தர:	எயிற்புரம் மூன்றையும் எரிப்பாய்	,,
337	अशोकः	அசோக:	துன்பமனைத்தையும் துடைப்போம்	,,
338	तारणः	தாரண:	அச்சம் கடக்க அருள்வாய்	,,
339	तारः	தார:	இப்பிறப் புவரிநின் றேற்றுவாய்	,,
340	शूरः	சூர:	மாற்றார்த் தொலை மிகுவலியோய்	,,
341	शौरिः	சௌரி:	சூரவசுதேவசுதனே	,,
342	जनेश्वरः	ஜநேச்வர:	பிறந்தவர்கெல்லாம் பிரானே	,,
343	अनुकूलः	அநுகூல:	என்றும் அடியார்க் கெளியாய்	,,
344	शतावर्तः	சதாவர்த்த:	செல்வ மென்யேன் விளை செல்வ	,,

345	पद्मी	பத்மீ:	தாமரை கையில் தரித்தாய்	போற்றி
346	पद्मनिभेक्षणः	பத்மநிபேக்ஷண:	பூவிரி கமலநோக் குடையாய்	,,
347	पद्मनाभः	பத்மநாப:	உருவத்தா மரை உந்தியாய்	,,
348	अरविन्दाक्षः	அரவிந்தாக்ஷ:	கமலப் பூவன்ன கண்ணு	,,
349	पद्मगर्भः	பத்மகர்ப்ப:	இதயத் தாமரை இருப்பாய்	,,
350	शरीरभृत्	சரீரப்ருத்	உள்ளுறைந் துணைத்தொழ உய்ப்பாய்	,,
351	महर्द्धिः	மஹர்த்தி:	பத்தர் நலன்கள் பாலிப்பாய்	,,
352	ऋद्धः	ருத்த:	நின்மலர் நிறைவினில் நிறைபவ	,,
353	वृद्धात्मा	வ்ருத்தாத்மா	பேறெலாம் சிறிதெனும் பெரியாய்	,,
354	महाक्षः	மஹாக்ஷ:	உவணப் புள்ளினை ஊர்வாய்	,,
355	गरुडध्वजः	கருடத்வஜ:	உவணப் புட்கொடி உயர்த்தாய்	,,
356	अतुलः	அதுல:	ஒப்பொரு வரையில் ஒருவனே	,,
357	शरभः	சரப:	கரையழிப்பாரைக் களைபவ	,,
358	भीमः	பீம:	நாகரும் அஞ்சும் நாமனே	,,
359	समयज्ञः	ஸமயஜ்ஞ:	அடியார் அடைபொழு தறிந்தவ	,,
360	हविर्हरिः	ஹவிர்ஹரி:	எக்கியத்தவிகளை ஏற்பாய்	,,

361	सर्वलक्षणलक्षण्यः	ஸர்வலக்ஷணலக்ஷண்ய:	பூமகள் அடிக்குறி பொலிந்தவ	போற்றி
362	लक्ष्मीवान्	லக்ஷ்மீவாந்:	என்னும் திருவனை ஏந்தால்	,,
363	समितिञ्जयः	ஸமிதிஞ்ஜய:	உயிர்களை பாதில் வென் றுயர்வாய்	,,
364	विक्षरः	விக்ஷர:	அன்பரின் நீங்கா அன்பே	,,
365	रोहितः	ரோஹித:	செம்மலர் அவர் செம்மேனியாய்	,,
366	मार्गः	மார்க:	பத்தரால் தேடப்படுவாய்	,,
367	हेतुः	ஹேது:	அடியர் பேறின் முதல் ஆனாய்	,,
368	दामोदरः	தாமோதர:	உதரம் கயிறுகட் டுண்டாய்	,,
369	सहः	ஸஹ:	தாம்பினால் கட்டச் சகித்தாய்	,,
370	महीधरः	மஹீதர:	பொறை தவர்த்துலகம் பொறுத்துவாய்	,,
371	महाभागः	மஹாபாக:	எல்லையில் பாக்கியம் இயைந்தாய்	,,
372	वेगवान्	வேகவாந்	குழவியா யினும்வரி குன்றாய்	,,
373	अमिताशनः	அமிர்தாசந:	உம்பர் கோனுணவினை உண்டவ	,,
374	उद्भवः	உத்பவ:	பற்றினர் பற்றறப் பார்ப்பாய்	,,
375	क्षोभणः	க்ஷோபண:	சீவனும் மூலமும் சேர்ப்பாய்	,,
376	देवः	தேவ:	உலகு விளையாட்டு வந்தாய்	,,

377 श्रीगर्भः	ஸ்ரீகர்ப்ப:	திருவின் திருவாம் செல்வ	போற்றி
378 परमेश्वरः	பரமேச்வர:	இந்திரை சேர் பரமேச்சுர	,,
379 करणम्	கரணம்	கழலடைவார்க்கு வான் கருவியே	,,
380 कारणम्	காரணம்	இந்திய முதலறி வீந்தாய்	,,
381 कर्ता	கர்த்தா	யாதினும் சுதந்திரம் எய்தினாய்	,,
382 विकर्ता	விகர்த்தா	அடியவர் இன்பு துன்படைவாய்	,,
383 गहनः	கஹந:	நினைப்பருங் குணங்கள் நிறைந்தவ	,,
384 गुहः	குஹ:	புவனியனைத்தும் புரப்பாய்	,,
385 व्यवसायः	வ்யவஸாய:	அனைத்து மடக்கும் ஆழியாய்	,,
386 व्यवस्थानः	வ்யவஸ்தாந:	பெருகு காலம்நிலை பெற்றவ	,,
387 संस्थानः	ஸம்ஸ்தாந:	எல்லாம் தனில்முடி இறைவ	,,
388 स्थानदः	ஸ்தாநத:	உயர்பதம் வேட்டோர்க் குதவுவாய்	,,
389 ध्रुवः	த்ருவ:	முன்னைத்துருவ மூர்த்தீ	,,
390 परर्द्धिः	பரர்த்தி:	பெருக்கொடு நிறை குணம் பெற்றாய்	,,
391 परमस्पष्टः	பரமஸ்பஷ்ட:	தோற்றத்திலும் பரம் துலங்குவாய்	,,
392 तुष्टः	துஷ்ட:	அவதரத்திற் களிப்படைவாய்	,,

393	पुष्टः	புஷ்ட:	பெருங்குண நிறைந்த பெரும	போற்றி
394	शुभेक्षणः	சுபேக்ஷண:	புனிதமாம் கடைக்கண்ணுக் குடையாய்	,,
395	रामः	ராம:	எழிலொடு குணங்களால் ஈர்ப்பாய்	,,
396	विरामः	விராம:	பிறர்தகை ஓயும் பெருமையாய்	,,
397	विरजः	விரஜ:	கலக்கமில் நெறியினைக் காட்டுவாய்	,,
398	मार्गः	மார்க:	யோகியும் தேடுதற் குரியாய்	,,
399	नेयः	நேய:	அடியவர் ஏவலின் அடங்குவாய்	,,
400	नयः	நய:	அனைத்தையும் அடக்கி நடத்துவாய்	,,
401	अनयः	அநய:	பகையால டக்கப் படாதாய்	,,
402	वीरः	வீர:	வேண்டலர் நடுங்கும் வீர	,,
403	शक्तिमतां श्रेष्ठः	சக்திமதாம்ச்ரேஷ்ட:	முனைவலித் தேவருள் முதல்வ	,,
404	धर्मः	தர்ம:	அறமே வடிவாய் அமைந்தோய்	,,
405	धर्मविदुत्तमः	தர்மவிதுத்தம:	தரும மறிந்தவர் தலைவ	,,
406	वैकुण्ठः	வைகுண்ட:	அடியரைச் சிறையொழித் தணைப்பாய்	,,
407	पुरुषः	புருஷ:	எவர்க்கும் தலைவனாயிருப்பாய்	,,
408	प्राणः	ப்ராண:	உயிரெலாம் உயிர்க்கும் உயிரே	,,

409	प्रणदः	ப்ராணத:	வாழ்பவைக்குயிரளி வள்ளால்	போற்றி
410	प्रणमः	ப்ரணம:	குணங்களால் அடிமை கொள்வாய்	,,
411	पृथुः	ப்ருது:	சீர்த்தி மிகுந்த செல்வ	,,
412	हिरण्यगर्भः	ஹிரண்ய கர்ப்ப:	பொன்னின் புதையல் போல்பவ	,,
413	शत्रुघ्नः	சத்ருக்ந:	இந்தியப் பகையை இகந்தோய்	,,
414	व्याप्तः	வ்யாப்த:	அனைத்தினும் ஒன்றுபோல் அன்பினாய்	,,
415	वायुः	வாயு:	நினைவரெங்குளரென நேடுவாய்	,,
416	अधोक्षजः	அதோக்ஷஜ:	பாதலத்தினும் சீர்பரந்தவ	,,
417	ऋतुः	ருது:	கணம் புதிதாக்குண கணத்தினாய்	,,
418	सुदर्शनः	ஸுதர்சந:	திப்பிய வடிவுடன் திகழ்ந்தாய்	,,
419	कालः	கால:	அனைத்தையும் குணங்கொண்டணைப்பாய்	,,
420	परमेष्ठी	பரமேஷ்டீ	வைகுந்தவான் பதம் வைகுவாய்	,,
421	परिग्रहः	பரிக்ரஹ:	பதம் அடியார்பெறப் பற்றுவாய்	,,
422	उग्रः	உக்ர:	கொடு மறத்தார்க்குக் கொடியவ	,,
